2014 ஆகஸ்ட் 5]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 338, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

**338—**

**கூட்டுக் குடிநீர்த் திட்டம்**

***21997—திரு. வே. குணசீலன்:**

*மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வந்தவாசி தொகுதி, கீழ்கொடுங்காலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை பிருதூர் வரையில் விரிவாக்கம் செய்ய அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்கி, திருத்திய விடையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

*(அ) மற்றும் (ஆ) வந்தவாசி தொகுதியில் செய்யாறு கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படாததால் இத்திட்டத்தை விரிவாக்கம் செய்ய சாத்தியக்கூறுகள் இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன் அவர்கள்.*

**திரு. வே. குணசீலன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழ் மக்களுக்கு உண்மையான தாயாகவும், தலைவியாகவும் விளங்கும் மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின்*

பொற்பாதங்களை வணங்குகிறேன். திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தொகுதி, வந்தவாசி ஊராட்சி ஒன்றியத்தில் கீழ்கொடுங்கானூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டிருந்தேன். ஏற்கெனவே அந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் பழுதடைந்த நிலையிலே இருக்கிறது. ஆனால், அந்தப் பகுதியில் சென்னாவரம் ஊராட்சி, பிருதூர் ஊராட்சி, கடைசிகுளம் ஊராட்சி, மருதாடு ஊராட்சி, மங்கநல்லூர் ஊராட்சி, விழுதுப்பட்டு ஊராட்சி, ஆறுகாட்டூர் ஊராட்சி, விளாங்காடு ஊராட்சி, சாத்தனூர் ஊராட்சி. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், உங்களுடைய கோரிக்கையை மட்டும் சொல்லுங்கள்.*

**திரு. வே. குணசீலன்:** *கீழ்கொடுங்கானூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை வழங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஆவன செய்யுமா எனக் கேட்டு அமர்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வந்தவாசி தொகுதியில், செய்யாறு கூட்டுக் குடிநீர்த் திட்டம் எதுவும் செயல்படுத்தப்படவில்லை. பிருதூர் குடியிருப்பு, வந்தவாசி தொகுதியில் உள்ள கீழ்கொடுங்கானூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து சுமார் 12 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள நிலையில், இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை பிருதூர்வரை விரிவாக்கம் செய்ய தொழில்நுட்ப சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.*

**திரு. ம. முத்துராமலிங்கம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் எங்களுடைய மதுரை மாவட்டத்திற்கு வைகை அணையிலிருந்து ஆண்டிப்பட்டி—சேடப்பட்டி—உசிலம்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டம்மூலமாக என்னுடைய திருமங்கலம் தொகுதிக்குட்பட்ட டி.கல்லுப்பட்டி, கள்ளிக்குடி பகுதிகளுக்கு*

தண்ணீர் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. மக்கள்தொகை அதிகமாகிவிட்ட காரணத்தால் 70 கிலோ மீட்டர் தொலைவிலிருந்து வரக்கூடிய தண்ணீர் போதுமான அளவுக்கு அந்தப் பகுதிக்கு வரவில்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கள்ளிக்குடி, டி. கல்லுப்பட்டி பகுதிகளுக்குப் போதிய தண்ணீர் வருவதற்கு கூடுதலாக வசதிகளை ஏற்படுத்தித் தருவார்களா என்பதையும் கருமாத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்பது நீண்டகாலத்திற்கு முன்பு போடப்பட்டது. அதிலே 11 பஞ்சாயத்துகள் திருமங்கலம் ஒன்றியத்தில் இருக்கின்றன. அதற்கும் புதிய திட்டம் ஒன்றை உருவாக்கித் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலே உள்ள அனைத்து மாநிலங்களிலும் குழாய்மூலம் குடிநீர் வழங்கப்படுவது 38.95 விழுக்காடுதான். ஆனால், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய நடவடிக்கையின் காரணமாக தமிழகத்தில் மட்டும்தான் 93.47 விழுக்காடு இன்றைக்கு குழாய்மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 339, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. செல்வராஜு, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**339—**

**கால்நடை மருத்துவக் கல்லூரி**

***47211—திரு. எம்.கே. செல்வராஜு:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—